<u>சுருக்கம்</u>

முதலமைச்சர் பொது நிவாரண நிதி –மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இளைஞன் திரைப்படத்தின் மூலம் கிடைத்த ரூ.45,00,000/– முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்பட்டது– மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் நலத் திட்டங்களை செயல்படுத்த முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.


---

**மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி 2 )த் துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.09**

**நாள்: 14-05-2010**
**திருவள்ளுவர் ஆண்டு 2041**
**சித்திரை 31–ம் நாள்**

**படிக்கப்பட்டது:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 24.4.2010.

–––––––

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பில் ''இளைஞன்'' திரைப்படத்திற்காக தனக்கு அளிக்கப்பட்ட 45 இலட்சம் ரூபாயை தமிழக அரசின் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலே ஒப்படைப்பதாகவும், இந்தத் தொகையினை தமிழகத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்கு ஒப்படைத்து அதன் மூலமாக இந்தத் தொகையை மாற்றுத் திறனாளிகளின் நலன்களுக்காகச் செலவிடப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

2. மாற்றுத் திறனாளிகள் நலன்களுக்காக தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் மேற்கொள்ளும் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 45 இலட்சம் ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்கு வழங்க உரிய ஆணைகள் வெளியிடுமாறு நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி )த் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இளைஞன் திரைப்படத்தின் மூலமாக கிடைத்த 45 இலட்சம் ரூபாயை மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் மேற்கொள்ளும் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மேலே ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகை ரூ.45,00,000/–க்கான (ரூபாய் நாற்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) காசோலையை மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் உறுப்பினர்/ செயலருக்கு அனுப்பி வைக்கும்படி பொருளாளர் மற்றும் அரசு துணைச் செயலாளர், நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறை, சென்னை–9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் உறுப்பினர் / செயலர் மேற்குறிப்பிட்ட தொகையை காசோலையாகவோ அல்லது வரைவோலையாகவோ பெற்று தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரியத்தின் கணக்குத் தலைப்பில் சேர்த்து மாற்றுத் திறனாளிகள் நலனுக்கு செலவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மேற்காணும் தொகை மாற்றுத் திறனாளிகளின் நலன்களுக்கென முற்றிலும் பயன்படுத்தப்பட்டமைக்கான உரிய பயனீட்டு சான்றிதழை தனது சான்றொப்பத்துடன் நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறும் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் உறுப்பினர் / செயலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6.இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.26693/முஅபொநிநி/2010, நாள் 14–5–2010 ன்படி அத்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு.ஜவஹர்
அரசுச் செயலர்

பெறுநர்
அரசு துணைச் செயலாளர் மற்றும் பொருளார், நிதி(மு.பொ.நி.நி)த் துறை, சென்னை–9. (3 நகல்கள்)
உறுப்பினர்–செயலர், மாற்றுத் திறனாளிகளுக்கான நல வாரியம், சென்னை.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, சென்னை–9.
நிதித்துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்